மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

மாலை எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!
குரோதி வருடம் ஐப்பசி 16
ஹிஜ்ரி 1446 ரபிஉல் ஆகிர் 29

SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

● புதுச்சேரி ● சனிக்கிழமை, நவம்பர் 2, 2024 ● வெளியூர்: 3-11-2024, ஞாயிற்றுக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 115 ● 6 பக்கம் ● ரூ.6

## தமிழக சட்டசபை டிசம்பர் முதல் வாரத்தில் மீண்டும் கூடுகிறது

**சென்னை, நவ. 2-**

தமிழக சட்டசபை கூட்டத்தொடர் கடந்த ஜூன் மாதம் 20ந் தேதி கூடியது. முதல் நாளில் மறைந்த எம்.எல்.ஏ.க்களுக்கு இரங்கல் குறிப்புகள் வாசிக்கப்பட்டு அவை நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டன. 21ந் தேதியில் இருந்து அரசுத் துறை மானியக் கோரிக்கைகள் மீது எம்.எல்.ஏ.க்களின் விவாதம், அமைச்சர்களின் பதிலுரை, 55 மானியக் கோரிக்கை மீது வாக்கெடுப்பு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஜூன் 29ந் தேதி வரை 9 நாட்கள் காலையிலும், மாலையிலும் அவை கூடியது. கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவம் தொடர்பாக சட்டசபையில் அ.தி.மு.க.வினர் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்பட அனைத்து அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் ஜூன் 26ந் தேதி முதல் சட்டசபை கூட்டத்தொடரில் இருந்து நீக்கிவைக்கப்பட்டனர். இதனால் அடுத்தடுத்து அவை கூடும் நிகழ்ச்சியில் அவர்கள் பங்கு பெற முடியாத சூழ்நிலை எழுந்தது.

ஆனால் அவை முன்னவரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து, சட்டசபை கூட்டத்தொடர் முழுவதும் அ.தி.மு.க.வினர் நீக்கி வைக்கப்பட்டு உத்தரவிடப்பட்டு உள்ளது என்றும், அதை கூட்டத்தொடர் என்றில்லாமல், கூட்டம் என்று மாற்றிக் கொள்ளலாம் என்று முதலமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் கூறினார். அந்த தீர்மானம் நிறைவேறியதை தொடர்ந்து அடுத்து வரும் சட்டசபை கூட்டத்தொடர்களில் அ.தி.மு.க.வினர் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டது.

கடந்த ஜூன் 29ந் தேதி சட்டசபை கூட்டம் முடிந்ததால் அடுத்த 6 மாதங்களுக்குள் அதாவது டிசம்பர் 28ந் தேதிக்குள் மறுபடியும் சட்டசபை கூட வேண்டும். இதுதொடர்பாக சமீபத்தில் அரசு உயர் அதிகாரிகள் கலந்து ஆலோசித்தனர். அதில், இந்த மாதம் இறுதி வாரம் அல்லது வரும் டிசம்பர் முதல் வாரத்தில் சட்டசபை கூட்டத்தை கூட்டலாம் என்று முடிவு செய்யப்பட்டு உள்ளது. இந்த கூட்டத்தை 3 அல்லது 4 நாட்கள் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்கான அறிவிப்பு இன்னும் 2 வாரங்களுக்குள் வெளியாகிறது. சபாநாயகர் அப்பாவு அந்த அறிவிப்பை வெளியிடுவார். சட்டசபை தேர்தல் நெருங்கி வரும் நிலையில், சட்டசபை கூட்டத் தொடர்கள் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்றன. ஆளும் கட்சியினர் தாங்கள் செய்த சாதனைகளையும், மக்கள் நலத் திட்டங்களையும் மக்களுக்கு தெரியப்படுத்த முயற்சிப்பார்கள். அதே நேரத்தில் எதிர்க்கட்சிகள், ஆட்சியில் நடக்கும் தவறுகளை வெளிப்படுத்த முயல்வார்கள். எனவே வரும் கூட்டத்தொடர் கடுமையான விவாதங்களுடன் காரசாரமாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த கூட்டத்தொடரில் புதிய சட்ட மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட வாய்ப்பு உள்ளது. அவை விதி 110ன் கீழ் முதலமைச்சர் புதிய அறிவிப்புகளை வெளியிடுவார்.

## மாநிலம் முழுவதும் விஜய் சுற்றுப்பயணம் டிசம்பர் 27ந்தேதி தொடங்குகிறார்?

**சென்னை, நவ. 2-**

தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் அரசியல் மாநாடு கடந்த மாதம் 27ந்தேதி விக்கிரவாண்டியில் நடந்தது. இந்த மாநாட்டில் தமிழகம் முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் விஜய்யின் பரபரப்பான பேச்சு தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. மாநாட்டை தொடர்ந்து 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள தமிழக வெற்றிக்கழகம் தயாராகி வருகிறது. அதற்கேற்ப அரசியல் வியூகங்களை விஜய் அமைத்து வருகிறார். கூட்டணி ஆட்சி, அதிகாரப்பகிர்வு என்ற அடிப்படையில் தேர்தல் அரசியலை முன்னெடுத்துள்ள விஜய் கூட்டணிக்கான வாசலை திறந்து வைத்துள்ளார்.


தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜனதா கூட்டணிகளில் உள்ள கட்சிகளை இழுக்கவும், எந்த கூட்டணியிலும் இல்லாத கட்சிகளை வரவழைக்கவும் தற்போது முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மற்றொரு பக்கம் தமிழக வெற்றிக்கழகத்தை அனைத்து நிலைகளிலும் பலப்படுத்தும் பணியையும் அவர் தொடங்கி உள்ளார். எந்தவொரு கட்சிக்கும் கட்டமைப்பு என்பது மிக முக்கியமானது. விரைவில் தமிழகம் முழுவதும் கட்சிக்கு புதிய நிர்வாகிகளை நியமிக்க விஜய் திட்டமிட்டு உள்ளார். ஏற்கனவே மாநாட்டு பணிக்காக பல்வேறு அணிகளை விஜய் அமைத்திருந்தார்.

அந்த அணிகளில் இடம் பெற்று, சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு புதிய பொறுப்புகளை விஜய் வழங்க இருக்கிறார். அதன்படி மாவட்ட, வட்ட, ஒன்றிய, கிளை வரை செயலாளர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள். தேர்தல் பணிக்காக இப்போதே ஒரு வாக்குச்சாவடிக்கு 10 பொறுப்பாளர்கள் வீதம் நியமித்து பணிகளை தொடங்கவும் விஜய் திட்டமிட்டு இருக்கிறார். நிர்வாகிகள் நியமிக்கப்பட்ட பிறகு, அடுத்த மாதம் (டிசம்பர்) 27ந்தேதி முதல் மாவட்ட வாரியாக சுற்றுப்பயணம் செய்ய விஜய் திட்டமிட்டு உள்ளார். இதற்கான பயண விவர தயாரிப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கோவையில் இருந்து சுற்றுப்பயணத்தை தொடங்கி, நெல்லையில் முடிக்கவும் திட்டமிடப்பட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. விஜய் சுற்றுப்பயணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா 2 நாட்கள் திட்டமிடப்பட்டு உள்ளது. எந்த மாவட்டத்திற்கு செல்கிறாரோ, அந்த மாவட்டத்தில் தங்கியிருந்து நிர்வாகிகளிடம் ஆலோசனை நடத்துகிறார். 2 நாள் நிகழ்வுகளில் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், பொதுக்கூட்டம், நல உதவிகள் நிகழ்ச்சி என்று பிரிக்கப்பட்டு உள்ளது. பிற கட்சிகளில் இருந்து வந்தவர்கள் தமிழக வெற்றிக்கழகத்தில் இணையும் நிகழ்வும் நடத்தப்படுகிறது. மக்கள் சந்திப்புக்காக விஜய்க்கு சிறப்பு வசதிகளுடன் வாகனம் தயாராகி வருகிறது. அந்த வாகனத்திலேயே அவர் மக்களை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. விக்கிரவாண்டியை போல் நெல்லையில் மாநாடு நடத்தவும் ஆலோசிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

### வங்கக்கடலில்

# 7ந் தேதி காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகிறது

## வானிலை ஆய்வு மையம் தகவல்



**சென்னை, நவ. 2-**

வடகிழக்கு பருவமழை கடந்த மாதம் (அக்டோபர்) 15ந் தேதி தொடங்கியதாக அறிவிக்கப்பட்டாலும், கிழக்கு திசை காற்று முழுமையாக தென் இந்திய பகுதிகளில் பரவி பருவமழை முழுவதுமாக தொடங்க உள்ளது. அதன்படி, தமிழ்நாட்டின் வட கடலோர மாவட்டங்களில் 5ந் தேதி அதிகாலையில் இருந்தே மழைக்கான வாய்ப்பு தொடங்கிவிடும் என்றே சொல்லப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக தென் இந்திய பகுதிகளில் சில இடங்களில் மழை பெய்யக்கூடும்.

இந்த நிலையில் பருவமழையின் தீவிரத்தை காட்டும் வகையில் வங்கக் கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக் கூடும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருக்கிறது. அந்த வகையில் தெற்கு வங்கக்கடலில் வருகிற 7 அல்லது 8ந் தேதி குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளது. இது தொடர்ந்து வலுப்பெற்று வட தமிழக பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஒட்டுமொத்தமாக நவம்பர் மாதத்தில் தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கடலோர ஆந்திரா, ராயல்சீமா, கேரளா உள்ளிட்ட தென் இந்தியாவில் வடகிழக்கு பருவமழை இயல்பைவிட அதிகமாக பெய்யக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருக்கிறது. அதாவது இயல்பைவிட 23 சதவீதம் அதிகமாக மழை பொழிவு இருக்கும் என சொல்லப்பட்டு உள்ளது. இதில் நவம்பர் முதல் வாரத்தில் இயல்புக்கு குறைவாகவும், 2வது வாரத்தில் இயல்பைவிட அதிகமாகவும் மழை பதிவாகும் என தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

தமிழ்நாட்டை பொறுத்தவரையில், இன்று (சனிக்கிழமை) அனேக இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் மிதமான மழையும், நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், தென்காசி, நெல்லை, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், கரூர், தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கந்த சஷ்டி திருவிழா யாகசாலை பூஜையுடன் தொடங்கியது

**திருச்செந்தூர், நவ. 2-**

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் கந்த சஷ்டி திருவிழா இன்று காலை யாக சாலை பூஜையுடன் தொடங்கியது. இதை முன்னிட்டு அதிகாலை 1 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது. 1.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம், 2 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் நடைபெற்றது. காலை 6 மணிக்கு சுவாமி ஜெயந்தி நாதர் யாகசாலையில் எழுந்தருளினார். அங்கு காலை 7 மணிக்கு யாக பூஜை தொடங்கியது. காலை 9 மணிக்கு மூலவருக்கு உச்சிகால அபிஷேகமும் தீபாராதனையும், மதியம் 12 மணிக்கு யாக பூஜையில் தீபாராதனையும் நடைபெற்று பின்னர் வேல் வகுப்பு, வீரவாள் வகுப்பு பாடல்களுடன் சுவாமி ஜெயந்தி நாதர் வள்ளி தெய்வானையுடன் தங்க சப்பரத்தில் எழுந்தருளி சண்முக விலாசம் மண்டபம் வந்து தீபாராதனை நடைபெற்றது.

மாலை 4.30 மணிக்கு திருவாவடுதுறை ஆதீன சஷ்டி மண்டபத்தில் சுவாமி ஜெயந்தி நாதருக்கு பல்வேறு அபிஷேக பொருட்களால் அபிஷேகம் நடைபெற்று தீபாராதனைக்கு பின் சுவாமி வள்ளி தெய்வானையுடன் தங்க தேரில் கிரி வீதி உலா வந்து கோவில் சேர்தல் நடக்கிறது. 2ம் திருவிழாவில் இருந்து 5ம் திருவிழா வரை 4 நாட்கள் கோவில் நடை அதிகாலை 3 மணிக்கு திறக்கப்படுகிறது. 3.30 மணிக்கு விஸ்வரூபம், 4 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம், காலை 9 மணிக்கு உச்சிக்கால அபிஷேகம் தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடக்கிறது.



திருவிழாவின் தொடக்கமாக கோவில் தக்கார் அருள் முருகனிடம் தாம்பூல தட்டு வழங்கிய காட்சி.

விழாவின் சிகர நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் 7ந்தேதி (வியாழக்கிழமை) நடக்கிறது. அன்று அதிகாலை 1மணிக்கு கோவில் நடை திறக்கப்படுகிறது. 1.30க்கு விஸ்வ ரூபம், 2 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம், காலை 6 மணிக்கு யாக பூஜை தொடங்கி மதியம் 12 மணிக்கு யாக சாலையில் தீபாராதனையும், 12.45 மணிக்கு சுவாமி ஜெயந்தி நாதர் சண்முக விலாசம் மண்டபம் வந்து அங்கு தீபாராதனை நடை பெறுகிறது.

மதியம் 2 மணிக்கு திருவாவடுதுறை ஆதீனம் சஷ்டி மண்டபத்தில் அபிஷேகம் நடைபெற்று அலங்கார தீபாராதனைக்கு பிறகு மாலை 4.30 மணிக்கு சுவாமி ஜெயந்திநாதர் சூரபத்மனை வதம் செய்ய கடற்கரையில் எழுந்தருளி சூரனை சம்ஹாரம் செய்கிறார்.

பின்னர் சந்தோஷ மண்டபத்தில் அபிஷேகம் நடைபெற்று கோவில் சேர்தல் நடக்கிறது. அன்று இரவு 108 மகாதேவர் சன்னதி முன்பு சாயாபி சேகம் நடைபெற்று சஷ்டி தகடு கட்டுதல் நடக்கிறது. 7ம் திருவிழாவான 8ந்தேதி திருக்கல்யாணம் நடக்கிறது. அன்று அதிகாலை 5.30 மணிக்கு அம்பாள் தபசு காட்சிக்கு புறப்படுதல், மாலை 6 மணிக்கு சுவாமி அம்பாளுக்கு காட்சி கொடுத்து தோள் மாலை மாற்றும் நிகழ்ச்சி நடக்கிறது. இரவு 11 மணிக்கு கோவில் அருகில் உள்ள திருக்கல்யாண மேடையில் சுவாமிக்கும் தெய்வானை அம்பாளுக்கும் திருக்கல்யாணம் நடக்கிறது.

பக்தர்கள் விரதம் இருப்பதற்காக கோவில் வெளி கிரி பிரகாரங்களில் 18 இடங்களில் சுமார் 1 லட்சத்து 30 ஆயிரம் பரப்பளவில் தற்காலிக குடில்கள் அமைக்கப்பட்டுள்ளது. கந்த சஷ்டி விழா இன்று தொடங்கியதையொட்டி நேற்று காலை முதலே பக்தர்கள் அங்கு குவிந்து வருகிறார்கள். நெல்லை, தூத்துக்குடி மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வரத் தொடங்கினர். தற்காலிக குடில்களிலும், கோவிலுக்கு சொந்தமான விடுதிகள், தனியார் விடுதிகள், திருச்செந்தூர் பகுதிகளில் உள்ள மடங்களிலும் பல்லாயிரக்கண க்கான பக்தர்கள் தங்கி உள்ளனர். அவர்கள் கடற்கரையிலும், நாழிக்கிணற்றிலும் புனித நீராடி விரதத்தை தொடங்கி உள்ளனர். சஷ்டி திருவிழாவையொட்டி

6–ம் பக்கம் பார்க்க

## கோவையில் அரசு விழாக்கள் மட்டுமின்றி தி.மு.க.வினரையும் சந்திக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

**கோவை, நவ. 2-**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழகம் முழுவதும் மாவட்ட வாரியாக சென்று கள ஆய்வுப்பணி மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

அதன்படி தனது முதல் கள ஆய்வுப்பணியை வருகிற 5ந்தேதி கோவையில் தொடங்குகிறார். 5ந்தேதி காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை புறப்பட்டு வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 2 நாட்கள் கோவையில் முகாமிட்டு பல்வேறு நலப்பணிகளை தொடங்கி வைக்கிறார். அத்துடன் அவர் கோவை மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளையும் சந்தித்து பேசுகிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் விவரம் வருமாறு:

5ந்தேதி காலை 10 மணிக்கு சென்னையில் இருந்து புறப்பட்டு கோவை வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு, விமான நிலையத்தில் அமைச்சர் செந்தில் பாலாஜி தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அங்கிருந்து கார் மூலம் மு.க.ஸ்டாலின் விளாங்குறிச்சி செல்கிறார். அங்கு புதிதாக ரூ.114.16 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய ஐ.டி. பார்க்கை திறந்து வைக்கிறார். பின்னர் ரேஸ்கோர்ஸ் அரசு விருந்தினர் மாளிகைக்கு செல்கிறார். அங்கு அரசு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துகிறார். மாலை 4 மணிக்கு கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகம் செல்கிறார். அங்கு தங்க நகை தயாரிப்பு தொழிலில் உள்ள சிக்கல்கள் குறித்தும், அதற்கு தீர்வு காணவும் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துகிறார்.

மாலை 5 மணிக்கு போத்தனூர் பிவிஜி திருமண மண்டபத்தில்



கோவை ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துகிறார். பின்னர் ரேஸ்கோர்ஸ் அரசு விருந்தினர் மாளிகைக்கு சென்று இரவில் தங்குகிறார். மறுநாள் (6ந்தேதி) காலை 10 மணிக்கு கோவை சிறை வளாகத்தில் 45 ஏக்கர் பரப்பளவில் ரூ.167 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் செம்மொழி பூங்கா பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்கிறார்.

தொடர்ந்து காந்திபுரம் பஸ்நிலையம் பகுதிக்கு சென்று டவுன் பஸ் நிலையம் பின்புறம் 6.9 ஏக்கரில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டுகிறார். மதியம் விமானம் மூலம் மீண்டும் சென்னை திரும்புகிறார். கோவை வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அரசு விழாக்கள் மட்டுமின்றி தங்களையும் சந்தித்து பேசுவதால் தி.மு.க. நிர்வாகிகள் உற்சாகம் அடைந்துள்ளனர். மு.க.ஸ்டாலின் வந்து செல்லும் அனைத்து இடங்களிலும் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்க தி.மு.க.வினர் ஏற்பாடு களை செய்து வருகிறார்கள்.

அமைச்சர் செந்தில் பாலாஜி கடந்த சில நாட்களாக கோவையில் முகாமிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கும் விழா ஏற்பாடுகளை நேரில் பார்வையிட்டு பணிகளை துரிதப்படுத்தி வருகிறார்கள். கோவை விளாங்குறிச்சியில் 8 தளங்களுடன் கட்டப்பட்டு உள்ள புதிய தொழில்நுட்ப பூங்காவை 5ந்தேதி முதலமைச்சர் திறந்துவைக்கிறார்.

6ந்தேதி காந்திபுரம் பஸ் நிலையம் மத்திய சிறைச்சாலை மைதானத்தில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் மற்றும் அறிவியல் பூங்காவிற்கான அடிக்கல் நாட்டுகிறார். இந்த நூலகம் 7 தளங்களுடன் ஒரு லட்சத்து 98 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் அமைகிறது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அதிகமுறை சுற்றுப்பயணம் செய்த மாவட்டமாக கோவை இருக்கிறது. கோவைக்கு இன்னும் பல திட்டங்களை முதலமைச்சர் வழங்க உள்ளார். இவ்வாறு அவர் கூறினார்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
• சனி • நவம்பர் 2, 2024
மாலை எக்ஸ்பிரஸ்


# ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் 4 பிராந்தியங்களில் ரூ.4,750 கோடிக்கு வளர்ச்சி திட்டம்: முதலமைச்சர் ரங்கசாமி அறிவிப்பு

**புதுச்சேரி, நவ. 2-**

புதுச்சேரி கடற்கரை சாலையில் நடந்த புதுச்சேரி விடுதலை நாள் விழாவில், முதலமைச்சர் ரங்கசாமி தேசியக்கொடி ஏற்றி வைத்து போலீஸ் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருந்த புதுச்சேரி கடந்த 1954ம் ஆண்டு நவம்பர் 1ம் தேதி விடுதலை பெற்றது. இதனை நினைவு கூறும் வகையில் நவம்பர் 1ம் தேதியை விடுதலை நாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

அதனையொட்டி நேற்று கடற்கரை சாலை நடந்த விழாவிற்கு காலை 9 மணிக்கு முதலமைச்சர் ரங்கசாமி வருகை தந்தார். அவரை நிதித்துறை செயலர் மோரே வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றார். அங்குள்ள கொடி கம்பத்தில் முதலமைச்சர் ரங்கசாமி தேசியக்கொடி ஏற்றினார். அப்போது திடீரென கனமழை கொட்டியது. அதனை பொருட்படுத்தாமல், மழையில் நனைந்தபடியே சென்று போலீஸ் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.







பின்னர் மேடை திரும்பிய முதலமைச்சர் ரங்கசாமி, விடுதலை விழா உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது, பிரதமர் நரேந்திர மோடி ஆசியோடு அரசு பல்வேறு வளர்ச்சி பணிகளை செய்து வருகிறது. புதுச்சேரி அரசு 16 துறைகள் மூலம் செயல் படுத்தப்படும் திட்டங்களின் கீழ் அவரவர் வங்கி கணக்கில் நேரடியாக பணம் செலுத்தப் படுகிறது. 2023–24ம் நிதி ஆண்டில் 796.82 கோடி ரூபாய் பயனாளிகள் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் பழங்குடியின மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு 124.76 கோடி நிதி வழங்கியுள்ளது. பாகூர், கரையாம்புத்தூர் கிராமங்களில் ஆதிதிராவிடர் பெண்களுக்கு ரூ. 10.95 கோடியில் இரண்டு விடுதிகள் கட்டப்பட உள்ளது.

முதல்வரின் அரவணைப்பு திட்டத்தின் கீழ் 2500 பெண் குழந்தைகள் பெயரில் தலா ரூ.50 ஆயிரம் வைப்பு தொகை வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 1,020 பெண் குழந்தைகளின் பெயரில் வைப்பு நிதி வழங்க ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. 70 ஆயிரம் குடும்பத்தலைவிக்கு மாதாந்திர நிதி உதவியாக ரூ. ஆயிரம் அவரவர் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. இதற்காக 2023–24ம் நிதி ஆண்டில் ரூ. 36.32 கோடி செலவிடப் பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் ரூ.25 கோடி வரை செலவிடப் பட்டுள்ளது.

புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் பகுதிகளில் பஸ் நிலையம், ரயில்வே நிலையங்களில் குழந்தைகள் உதவி மையம் அமைக்கப்பட உள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித் தொகையில் 1,000 ரூபாய் கூடுதலாக உயர்த்தி, கடந்த அக்டோபர் மாதம் முன் தேதியிட்டு இந்த நவம்பர் மாதம் முதல் சேர்த்து வழங்கப்படும். இதில், 21,329 பேர் பயன்பெறுவர். அரசு பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஆங்கில மொழி திறனை மேம்படுத்த திஷா அறக்கட்டளை மூலம் மாணவர்கள், ஆசிரியர்களுக்கு வாயிலாக பயிற்சி அளிக்கப்படும். ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன், புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் நகர பகுதிகளில் உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம் ரூ.4,750 கோடிக்கு மதிப்பீடு செய்யப்பட்டு, மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் புதுச்சேரியில் 50 எம்.எல்.டி., கொள்ளளவு உள்ள கடல் நீரை குடிநீராக்க சுத்திகரிப்பு நிலையம் இரண்டு அமைக்கப்படும். நான்கு பிராந்தியங்களுக்கும் நல்ல குடிநீர், கழிவுநீர் வசதிகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்தல், மரப்பாலத்தில் இருந்து அரியாங்குப்பம் வரை மேம்பாலம் அமைத்தல், சாலைகள், உப்பனாறு, பெரிய வாய்க்கால் களை மேம்படுத்தல், வாகனங்கள் நிறுத்த வசதி அமைத்து தரப்படும்.

தமிழக அரசுடன் கடந்த 2007ல் செய்த ஒப்பந்தப்படி சாத்தனூர் அணை தண்ணீர் பெற்று, அதை சுத்திகரித்து விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதி உதவியுடன் புதுச்சேரியில் உள்ள பிரதான ஏரிகளை ஆழப்படுத்தி, நீர் சேமிக்க திட்ட மதிப்பீடு தயாரிப்பு பணி ‘வாப்காஸ்’ பொதுத்துறை நிறுவனத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.

ஏ.எப்.டி., திட்டத்தின் மூலம் அனைத்து ஏரிகளிலும் மழை நீரை சேமித்து, சுத்திகரித்து குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

அரசு துறைகளில் உள்ள பெரும்பாலான காலி பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. மீதமுள்ள பணியிடங்களும் விரைவில் நிரப்பப்படும். புதுச்சேரியில் குற்றங்கள் நடப்பது வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. மக்கள் சுதந்திரமாக, பாதுகாப்பாக வாழ்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி கொடுப்பதை கடமையாக ஏற்று அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு முதலமைச்சர் ரங்கசாமி பேசினார்.

விழாவில் அமைச்சர்கள் நமச்சிவாயம், லட்சுமி நாராயணன், தேனீ. ஜெயக்குமார், சாய் ஜெ. சரவணன்குமார், எதிர்க்கட்சித் தலைவர் சிவா, துணை சபாநாயகர் ராஜவேலு, எம்.எல்.ஏ.,க்கள் கல்யாணசுந்தரம், ஏ.கே.டி., ஆறுமுகம், கே.எஸ்.பி., ரமேஷ், ஜான்குமார், ராமலிங்கம், சிவசங்கர், சம்பத், செந்தில்குமார், பாஸ்கர், முன்னாள் அமைச்சர் விஸ்வநாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## தலையங்கம்

**மாலை எக்ஸ்பிரஸ்**

2.11.2024 (சனிக்கிழமை)

### ரயில் பயணிகளின் கோரிக்கை

அனைத்து தரப்பினரும் பயணிக்கும் வகையில் ரெயில்கள், போக்குவரத்தில் முக்கிய பங்காற்றுகின்றன. தூங்கும் வசதி, கழிப்பறை வசதி, பாதுகாப்பான பயணம் என பல்வேறு அம்சங்கள் ஒருங்கே இருப்பதால், ரெயில் பயணத்தை விரும்பாதவர்கள் யாரும் இருக்க முடியாது. அதனால்தான், போக்குவரத்து என்று வரும்போது பயணிகளின் முதல் தேர்வாக ரெயில்கள் இருக்கின்றன.

அதிலும், முன்பதிவு செய்து ரெயில்களில் பயணிக்கும்போது, அது வசதியான பயணமாக, சுகமான பயணமாக பயணிகளால் உணர முடியும். மூட்டை முடிச்சுகளை அதிகம் எடுத்துச் செல்பவர்களுக்கு ரெயில் பயணமே சிறந்தது. 24 பெட்டிகளை கொண்ட ஒரு எக்ஸ்பிரஸ் ரெயிலில், முன்பதிவு செய்யப்படாத பெட்டிகள் 2 முதல் 4 எண்ணிக்கையில்தான் இருக்கின்றன. மற்றவை, குளுமை வசதி செய்யப்பட்ட முதல் வகுப்பு, 2வது வகுப்பு, 3வது வகுப்பு பெட்டிகள் மற்றும் குளுமை வசதியில்லாத படுக்கை வசதி பெட்டிகள் இணைக்கப்பட்டிருக்கும். இவை அனைத்தும் முன்பதிவு செய்து பயணிக்க கூடியவை.

நேற்று முன்தினம் வரை ரெயில் டிக்கெட் முன்பதிவு செய்வதற்கான கால அவகாசம் 120 நாட்களாக இருந்தது. அதாவது, பயணம் செய்யும் நாளிலிருந்து 4 மாதங்களுக்கு முன்பே டிக்கெட் கவுண்ட்டர்களிலோ, ஆன்லைன் மூலமாகவோ டிக்கெட்டை முன்பதிவு செய்துவிட முடிந்தது. இதனால், குறுகிய காலத்தில் திட்டமிட்டு பயணிக்க விரும்புபவர்களுக்கு ரெயில்களில் டிக்கெட் கிடைக்காத நிலை ஏற்பட்டது. சிலர், சரியாக திட்டமிடவில்லை என்றாலும், “எதற்கும் எடுத்து வைப்போம். போகவில்லையென்றால் ரத்து செய்துவிடலாம். குறைந்த அளவு பணத்தை தானே பிடித்துக்கொள்கிறார்கள்” என்று எண்ணி 120 நாட்களுக்கு முன்பே டிக்கெட் முன்பதிவு செய்துவிடுவது வழக்கமாக இருந்தது. அந்தவகையில், பயண தேதிக்கு முன்பு 61 நாளில் இருந்து 120 நாள் வரை டிக்கெட் முன்பதிவு செய்பவர்களில் 21 சதவீதம் பேர் ரத்து செய்துவிடுவதாக ரெயில்வே நிர்வாகம் புள்ளி விவரம் அளிக்கிறது.

இதில், காத்திருப்போர் பட்டியலில் இருந்து ரத்து செய்பவர்களும் அடங்கும். கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் இவ்வாறு முன்பதிவு செய்து டிக்கெட்டை ரத்து செய்தவர்களால், ரெயில்வே துறைக்கு ரூ.1,229.85 கோடி வருமானம் கிடைத்துள்ளது. இந்தியா முழுவதும் ஒரு நாளைக்கு 2.4 கோடி பயணிகள், 13 ஆயிரத்து 169 ரெயில்களில் பயணம் செய்கிறார்கள். இந்த நிலையில், டிக்கெட் முன்பதிவு செய்யும் காலத்தை 120 நாட்களில் இருந்து 60 நாளாக ரெயில்வே வாரியம் குறைத்து, நேற்று நவம்பர் 1ந்தேதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவித்து அதன்படி அமலுக்கு வந்துவிட்டது. இது, குறுகிய காலத்தில் திட்டமிட்டு ரெயில்களில் பயணிப்பவர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதால் வரவேற்கலாம்.


அதே நேரத்தில், ரெயில் டிக்கெட் முன்பதிவுக்கான காலத்தை 120 நாட்கள், 90 நாட்கள், 60 நாட்கள், 45 நாட்கள், 30 நாட்கள் என்று அடிக்கடி மாற்றுவது பயணிகள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும். மற்றபடி, காத்திருப்போர் பட்டியலிலுள்ள பயணி களின் எண்ணிக்கையை கணக்கிட்டு, குறிப்பிட்ட வழித்தடத்தில் சிறப்பு ரெயில்களை இயக்க வசதியாக இருக்கும் என்று கூறப்படுவது ஏற்றுக்கொள்ளத்தக்கது. ஆனால், சிறப்பு ரெயில்களிலும் வழக்கமான கட்டணத்தையே வசூலிக்கவேண்டும் என்பது பயணிகளின் கோரிக்கையாக இருக்கிறது.

# குழந்தைகளுடன் ஆட்சியர் கலந்துரையாடல்



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக் குட்பட்ட வடிவீஸ்வரம் பகுதியில் உள்ள சத்யா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகத்தில் தங்கி இருப்பவர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா நேரில் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

# WTA Finals: Amidst accusations of ‘sportswashing’, American tennis star holds talks with Saudi leaders on treatment of women



**New Delhi, Nov.2-**

Ahead of the women’s tennis year-end tournament in Saudi Arabia, which has attracted plenty of criticism due to the alleged rights violations in the country, world number 3 Coco Gauff said she held discussions with country’s leaders over the issue. The American tennis star said her father was ‘concerned’ over her visit to the country and she had ‘reservations’ about participating in the WTA Finals starting Saturday. Gauff said she met with Princess Reema bint Bandar Al Saud, the Saudi Ambassador to the United States, and discussed the treatment of women in the country.

“We spoke with a lot of women here in Saudi. Multiple calls with her, how the best approach would be to enter into this different place that women have never kind of, women from the US, have never kind of been in. I think for me it was important, and it was one of the questions I brought up because about LGBTQ issues, women’s rights issues, how we can help with that,” the 20-year-old told reporters on Friday.

Saudi Arabia has been accused of ‘sportswashing’ by a section of former players and tennis experts.

While putting across her stand on playing in the Gulf Kingdom, Gauff referenced the experience of the Black community in the US and compared the situation in Saudi to what her grandmother went through decades ago.

“I think knowing from the past from my grandmother, integrating her school, people aren’t going to like it, but obviously in the long run I think it could be better for everybody,” she said. “I really do feel like in order to ignite change, you have to start little by little. That’s how I’ve been taught growing up Black in America, knowing our history.”

Gauff, one of eight players in Riyadh for the tournament, said she was ‘so far encouraged by the progress she’d seen’ but warned: “If I felt uncomfortable or felt like nothing’s happening, then maybe I probably wouldn’t come back.”

# குழந்தைகளுக்கு தீபாவளி பரிசு வழங்கல்



சேலம் அஸ்தம்பட்டியில் உள்ள அன்னை சத்யா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் இல்லத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி ஆதரவற்ற குழந்தைகளுக்கு தீபாவளி பரிசு பொருட்களை நேரில் சென்று வழங்கினார்கள்.

# Shan Masood on out-of-form Babar Azam: ‘There’s no harm in being pulled out at times and having a breather’

**New Delhi, Nov.2-**

Pakistan Test captain Shan Masood believes that a break from the game will benefit the “out-of-form” Babar Azam, who was recently dropped from Pakistan’s Test squad.

The former Pakistan captain was omitted after the first Test against England but is set to make a comeback in the white-ball series against Australia.




“I think he’s one of the best batsmen in the world. I’m nobody to deny him a future. He has every quality to be one of the greatest batsmen in Test cricket,” Shan said on the BBC’s Stumped podcast.

“He’s always near the top in the rankings. Sometimes, people just need a break. Personally, I think this break will benefit him greatly, and he’ll come back a stronger player.

“There’s no harm in being pulled out at times and having a breather. He’s played a lot of cricket, gone through a lot, and he’ll always be one of Pakistan’s key batsmen.”

Pakistan’s next Test assignment is a two-match series against South Africa in December.

The scrutiny around Babar Azam’s form has intensified with each successive failure at the crease. The right-hander hasn’t scored consistently in 18 innings, and since the start of 2023, his average has dropped below 21 across nine Tests.

Former Pakistan Cricket Board (PCB) chief Ramiz Raja recently commented that Babar’s slump in form is not due to technical flaws but rather a mental aspect.

“I think it’s more about his temperament in Test cricket. When his form slumps, it takes him longer to make a comeback in red-ball cricket compared to white-ball,” Ramiz said.

“Technically, he doesn’t stay still against balls pitched on a back-of-a-length, so he needs to be a bit more side-on. Lately, he’s been getting out caught behind to balls moving away. He also has some struggles against spin. While he bats at No. 4 in Tests, in white-ball cricket, I don’t think spin is as much of an issue. But as I mentioned, it’s more about adjusting his mental game rather than his technique.”

# புதிய பேருந்து வழித்தடம் துவக்கி வைப்பு




**ராமநாதபுரம், நவ. 2–**

ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்எல்ஏ அறிவுறுத்தலின்படி பாம்பன் முதல் வேதாளை வரை இயங்கி வந்த டவுன் பஸ் வழிதடத்தை உச்சிப்புளி வரை மாற்றுவதற்கு ராமநாதபுரம் மாவட்ட போக்குவரத்து துறை மேலாளர் கவனத்திற்கு எடுத்து சென்று முதல் மக்கள் பயன்பாட்டிற்கும் கொன்டு வந்த மண்டபம் கிழக்கு ஒன்றிய செயலாளர் நிலோபர்கான் தலைமையில், வேதாளை ஊராட்சி மன்ற தலைவர் அல்லாபிச்சை முன்னிலையில் தொடங்கி வைக்கப்பட்டது.

# புதுச்சேரி வரலாறு புகைப்பட கண்காட்சி முதலமைச்சர் ரங்கசாமி துவக்கி வைப்பு



**புதுச்சேரி, நவ. 2–**

புதுச்சேரி கடற்கரைச் சாலை நகராட்சியின் புதுப்பிக்கப்பட்ட மேரி ஹாலில், 3 நாள் நடக்கும் புதுச்சேரி வரலாறு புகைப்பட கண்காட்சியை முதலமைச்சர் ரங்கசாமி துவக்கி வைத்தார்.

பிரெஞ்ச் ஆட்சியாளர்களிடம் இருந்து புதுச்சேரி முறைப்படி இந்தியாவுடன் இணைந்த நவ. 1ம் நாள் புதுச்சேரியின் விடுதலை நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது. விடுதலை நாளையொட்டி, சுற்றுலாத்துறை சார்பில் 3 நாள் நடக்கும் புதுச்சேரி வரலாற்று புகைப்பட கண்காட்சி கடற்கரை சாலை மேரி ஹாலில் நேற்று துவங்கியது. கண்காட்சியில் புதுச்சேரி விடு தலை வரலாறு நிகழ்வுகள், பிரெஞ்ச் கட்டிடக்கலை, பண்பாட்டு வளர்ச்சி, பிரெஞ்சு ஆட்சியாளர்களின் கீழ் புதுச்சேரியில் வளர்ச்சி முதல் தற்போதைய மறு உருவாக்கம் வரை யிலான 400க்கும் மேற்பட்ட புகைப் படங்கள் பார் வைக்கு வைக்கப் பட்டுள்ளது.

இந்த கண்காட்சியை முதலமைச்சர் ரங்கசாமி துவக்கி வைத்தார். அமைச்சர்கள் நமச்சிவாயம், லட்சுமி நாராயணன், தேனீ. ஜெயக்குமார், சாய் ஜெ. சரவணன்குமார், எம்.எல்.ஏ.,க்கள் ஏ.கே.டி., ஆறுமுகம், பாஸ்கர் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.இன்றும், நாளையும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை கண்காட்சியை பார்வையிடலாம். அனுமதி இலவசம். மேரி ஹால் திறக்கப்பட்ட பின்பு நடக்கும் முதல் கண்காட்சி என்பது குறிப்பிடத்தக்கது. ஏராளமான சுற்றுலா பயணிகள் கண்காட்சியை ஆர்வமுடன் கண்டுகளித்து புகைப்படம் எடுத்துக் கொள்கின்றனர்.

# தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடை வழங்கல்



**சங்கரன்கோவில், நவ. 2–**

சங்கரன்கோவில் நகராட்சி தூய்மை பணியாளர்கள் தீபாவளி பண்டிகையை சிறப்பாக கொண்டாடும் வகையில் தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி சரவணன் தலைமை வகித்து தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகள் வழங்கி தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்வில் நகராட்சி சுகாதார அலுவலர் வெங்கட்ராமன், சுகாதார ஆய்வாளர்கள் கருப்பசாமி, கைலாசம், நகராட்சி கவுன்சிலர்கள் அலமேலு, செல்வராஜ், உமாசங்கர், ராஜாஆறுமுகம், புஷ்பம், ஷேக் முகம்மது, வேல்ராஜ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சரவணன், ராமர் மற்றும் நகராட்சி பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# சம்ஹிதா அகாடமியில் விளையாட்டு தின விழா



**கோவை, நவ. 2–**

கோவை மலுமிச்சம்பட்டி பகுதியில் உள்ள, சம்ஹிதா அகாடமியின் ஏழாம் ஆண்டு விளையாட்டு தின விழா, பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.முன்னதாக நடைபெற்ற இதன் துவக்க விழாவில்,பள்ளியின் முதல்வர் புஷ்பஜா கண்ணதாசன். தேசிய கொடியை ஏற்றி விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார். இதில் வாயு, அக்னி, பிருத்வி மற்றும் ஜல் என நான்கு அணிகளாக பள்ளி மாணவ,மாணவியர்கள் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்றனர்.

இதில் பள்ளி மாணவ,மாணவிகளின் அணிவகுப்பு நடைபெற்றது. தொடர்ந்து விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் பள்ளியின் ஸ்போரட்ஸ் கேப்டன் மாணவர் ஞானராஜ் வரவேற்று பேசினார். தொடர்ந்து, தடகளபோட்டிகள், சிலம்பம், கராத்தே, பிரமிடு, மாஸ்டர் டிரில் மற்றும் 200 மற்றும் 400 மீட்டர் ஓட்டப்பந்தயம் உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றன.

விளையாட்டு தின நிகழ்ச்சிகளை உடற்கல்வி ஆசிரியர்கள் ஹரிதா மற்றும் காந்தி நாதன் ஒருங்கிணைத்தனர். இதில் ஆர்வமுடன் கலந்து கொண்ட மாணவ, மாணவிகள் அசத்தலாக தங்கள் திறமைகளை நிரூபித்தனர்.

அனைத்து போட்டிகளிலும் சிறந்து விளையாடிய அக்னி அணி அதிக புள்ளிகள் பெற்று ஒட்டு மொத்த சாம்பியன் கோப்பையை தட்டி சென்றது. முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய பள்ளி முதல்வர் புஷ்பஜா, மாணவர்களுக்கு விளையாட்டு என்பது மிகவும் முக்கியமான ஒன்று எனவும், எங்களது பள்ளியில் கல்வியோடு மாணவ, மாணவிகளின் விளையாட்டு திறன்களை ஊக்குவிக்கும் வகையில் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். விழாவில் மாணவ, மாணவிகள் பெற்றோர்கள், பள்ளி ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# சரசு அம்மையார் 3ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி



**புதுச்சேரி, நவ. 2–**

தெய்வத்திரு சரசு அம்மையார் மூன்றாம் ஆண்டு நினைவேந்த நிகழ்ச்சி அரியாங்குப்பம் பிரம்மன் சிலை அருகில் நடைபெற்றது. நிகழ்ச்சியானது சரசு அம்மையாரின் மகன்கள் பிருத்திவிராஜ், பரமசிவம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் கலந்து கொண்டு மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்ட அம்மையாரின் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் 200க்கும் ஏற்பட்ட நபர்களுக்கு அன்னதானம் மற்றும் புடவை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பாண்டியன், பழனி ஐயப்பன், வசந்தகுமார், கலைவாணி, மனோ, புனிதா மற்றும் ஊர் பொதுமக்கள், நண்பர்கள் என திரளாக கலந்து கொண்டனர்.

# அரசுத்துறை இயக்குனர்கள் 6 பேர் ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளாக பதவி உயர்வு

**புதுச்சேரி, நவ. 2–**

புதுச்சேரி அரசு துறையில் பணிபுரியும், 6 இயக்குனர்கள் ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளாக பதவி உயர்வு பெற உள்ளனர்.

மத்திய அரசு, உயர் பதவி வகிக்கும் அரசுத்துறை அதிகாரிகளுக்கு, அவ்வப்போது ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளாக பதவி உயர்வு வழங்கி வருகிறது. இந்நிலையில் புதுச்சேரி அரசுத் துறைகளில் பணிபுரியும், குடிமைப் பணி அதிகாரிகளான இயக்குனர்கள் பதவி மூப்பின் அடிப்படையில் ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளாக பதவி உயர்வு பெற உள்ளனர்.

இந்த பட்டியலில் கல்வித்துறை இயக்குனர் பிரியதர்ஷினி, அறிவியல் தொழில்நுட்பத் துறை இயக்குனர் ரெட்டி, வணிகவரித்துறை ஆணையர் முகமது மன்சூர், சிறைத்துறை ஐ.ஜி., ரவி தீப்சிங் சாகர், தொழில்துறை இயக்குனர் ருத்ர கவுடு, போக்குவரத்து ஆணையர் சிவக்குமார் ஆகிய 6 அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர்.

# கல்லறை தோட்டத்தில் மலர்கள் தூவி அஞ்சலி



கல்லறை திருநாளை முன்னிட்டு கும்பகோணம் அலங்கார அன்னை பேராலய கல்லறை தோட்டத்தில் உள்ள முன்னோர்கள், நண்பர்கள் நினைவிடங்களில் மலர்களால் அலங்கரித்தும் மலர் மாலை அணிவித்தும், மலர்கள் தூவியும் மெழுகுவர்த்தி ஏற்றியும் குடும்பத்தினருடன் வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

# கொரியன் தேக்வாண்டோ கிளப் மாணவர்களின் உலக சாதனை முயற்சி



**கும்பகோணம், நவ. 2–**

கும்பகோணம் மதர் கிளாரக் பள்ளியில் கொரியன் தேக்வாண்டோ கிளப் மாணவர்களின் உலக சாதனை முயற்சி பள்ளி தலைமை ஆசிரியர் பவுலின் மேரி மற்றும் நடுவர்கள் புவனேஷ் யாக்கோப், தன்ராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கும்பகோணம் கிளாரட் நகர் தேக்வாண்டோ மாஸ்டர் பஷீர், முகமது சபீர், ஷஃபானா பாத்திமா, ஆகாஷ், அஜய், சுபாஷ் சந்திரபோஸ், அப்துல் அஜீஸ், சசிகுமார், கிரித்திக் கௌரவ், மணிக்கர்ணிகா ஆகிய பத்து மாணவர்கள் ஒரு மணி நேரத்தில் ஒரு லட்சம் பன்ச்கள் அடித்து உலக சாதனை புரிந்தார்கள்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● சனி ● நவம்பர் 2, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# மொழிவாரி மாநிலங்கள் உருவான நாள் கொண்டாட்டம்



**தென்காசி, நவ. 2-**

1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் தேதி மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டு செங்கோட்டை தென்காசி குற்றாலம் பகுதிகளை உள்ளடக்கிய தனி தமிழ்நாடு கிடைத்த இந்த நாளை தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள்.

ஆங்கிலேயர்கள் சுதந்திரம் கொடுக்கின்ற போது மாகாணங்களாக எல்லைகளை வகுத்து கொடுத்தார்கள் மலையாள நாட்டை ஒட்டி இருந்த குமரி மாவட்டத்தில் உள்ள தமிழர்கள் பகுதி செங்கோட்டை தென்காசி குற்றாலம் தமிழர் பகுதிகள் அனைத்தும் திருவிதாங்கூர் கொச்சி சமஸ்தானத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது சமஸ்தான நிர்வாகம்.

உயர்ஜாதி குடிமக்களுக்கு ஆதரவாகவும், மிகவும் பின்தங்கிய மக்களுக்கு எதிராகவும் ஆட்சி நடத்தினார்கள். திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கட்டுப்பாட்டில் இருந்த தமிழர்களை இழி ஜாதியினராக கருதி அடக்குமுறைகளை கையாண்டார்கள்.

இந்த பகுதியில் வாழ்ந்த நாடார் சமுதாயத்தைச் சேர்ந்த பனைத் தொழிலாளர்கள் மிகவும் அடக்குமுறையால் பாதிக்கப்பட்டார்கள்.

திருவிதாங்கூர் கொச்சி சமஸ்தானத்தை எதிர்த்து இந்த பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தினார்கள். முதல் போராட்டத்தில் 9 நபர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இந்த பகுதியில் வாழ்ந்த நாடார்கள் மீது பனைக்கு வரி, தலைக்கு வரி, பனை ஏறும் தளைக்கு வரி, கூரை வீட்டுக்கு வரி, கூரையை மாற்றினால் வரி என்று பல்வேறு விதமான வரிவிதிப்புகளை கொண்டு கொடுமைகளுக்கு உள்ளாக்கினார்கள் 11/08/1954 முதல்14/02/1955 வரை 188 நாட்கள் தொடர் போராட்டத்தை இந்த பகுதியில் வாழ்ந்த நாடார் சமுதாய மக்கள் மார்சல் நேசமணி மபொசி குஞ்சன் நாடார், சிதம்பரம் பிள்ளை போன்ற தலைவர்கள் தலைமையில் அனைத்துக் சமய சமுதாய மக்களும் போராடினார்கள். இந்த போராட்டத்தின்போது 11 நபர்கள் சுட்டுக் கொல்லப் பட்டார்கள்.

பெருந்தலைவர் காமராஜர் ஆட்சி காலத்தில் மபொசியின் கோரிக்கையை ஏற்று மொழி வாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டது.

அப்போது செங்கோட்டை, தென்காசி, குற்றாலம் பகுதிகளை மலையாள அரசு தமிழகத்தோடு இணைக்க மறுப்பு தெரிவித்தது. இதனால் காமராஜர் இந்திய உயர் மட்ட அரசியல் தலைவர்களையும், மலையாள அரசியல் தலைவர்களையும் அழைத்து பேசி இந்த பகுதிகளை தமிழகத்தோடு இணைத்தார்கள். இன்று தமிழகத்தில் மிகப்பெரிய நகரமாக விளங்கும் தென்காசி மிகப்பெரிய சுற்றுலா தலமாக விளங்குகின்ற குற்றாலம், செங்கோட்டை பகுதிகள் தமிழகத்தோடு இருக்கிறது என்றால் மார்சல் நேசமணி நாடார், குஞ்சன் நாடார், சிதம்பரம் பிள்ளை, மபொசி போன்ற தலைவர்களின் தலைமையில் நடைபெற்ற போராட்டங்களும், 20 நபர்களின் உயிர் தியாகங்களும் இதற்கு பெரிதும் காரணமாகும்.

பெருந்தலைவர் காமராஜர் முயற்சியால் தனித் தமிழ்நாடும், குற்றாலம், தென்காசி ,செங்கோட்டை பகுதிகள் கிடைத்த நாளையும் நினைவுகூறுகின்ற வகையில் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் இனிப்புகள் வழங்கி கொண்டினர்.

குற்றாலம் பேருந்து நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயர் சூட்ட வேண்டும் குற்றாலத்தில் காமராஜர் முழு திருவுருவ சிலை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப் பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாநில பொருளாளர் சுப்பிரமணியன், பொதுச் செயலாளர் ஜான் டேவிட், மத்திய மாவட்ட தலைவர் முருகன், மேற்கு மாவட்ட தலைவர் குருசாமி நாடார், தென்காசி மாவட்ட தலைவர் ராஜ் நயினார், குற்றாலம் நாராயணன், கொட்டாங்குளம் சண்முகராஜ்,

அய்யாபுரம் கணேசன், கணபதி சக்தி முப்புடாதி கணபதி, கீழப்புலியூர் நயினார் மற்றும் நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# 'புதுச்சேரி குட்டி இந்தியாவாக திகழ்கிறது' கவர்னர் கைலாஷ்நாதன் புகழாரம்



**புதுச்சேரி, நவ. 2-**

புதுச்சேரி ராஜ்நிவாசில் பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் உதயநாள் விழா நேற்று நடந்தது. விழாவை கவர்னர் கைலாஷ்நாதன் துவக்கி வைத்தார். இதில், முதலமைச்சர் ரங்கசாமி, அமைச்சர்கள் நமச்சிவாயம், லட்சுமி நாராயணன், தேனீ. ஜெயக்குமார், சாய் ஜெ. சரவணன்குமார், அரசு செயலர்கள், போலீஸ் உயரதிகாரிகள், புதுச்சேரியில் வாழும் ஆந்திரா, சத்தீஸ்கர், ஹரியானா, கர்நாடகா, கேரளா, மத்திய பிரதேசம், பஞ்சாப், தமிழ்நாடு, அந்தமான், நிக்கோபார் தீவுகள், சண்டிகர், டில்லி மற்றும் லட்சத்தீவைச் சேர்ந்த பிரதிநிதிகள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பண்பாடு, கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் விதமாக கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

விழாவில், கவர்னர் கைலாஷ்நாதன் பேசியதாவது, 'புதுச்சேரியில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மக்கள் ஒன்றாக வாழ்ந்து வருகின்றனர். இது சிறப்பான சுற்றுலாத்தலமாக மட்டும் இல்லாமல் பல்வேறு மாநில பண்பாடுகளையும் பிரதிபலிக்கும் 'குட்டி இந்தியாவாக' உருவாகி இருப்பது பெருமகிழ்ச்சியை அளிக்கிறது.

பிரதமரின் 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' திட்டத்தின் கீழ் நடக்கும், இது போன்ற நிகழ்ச்சிகள் மூலமாக நம்முடைய சகோதரத்துவத்தை நாம் பலப்படுத்திக் கொள்ள முடிகிறது. நம்முடைய மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள், கலை, வரலாறு எல்லாவற்றையும் ஒரே நேர் கோட்டில் இணைத்து பார்த்து இந்தியர்கள் அனைவரும் ஒன்று என்ற உணர்வை புரிந்து கொள்ள முடிகிறது.' இவ்வாறு அவர் பேசினார்.

இதனைத் தொடர்ந்து, புதுச்சேரி மாநிலத்தின் விடுதலை வரலாற்றை விளக்கும் விதமாக கிராமப்புறங்களை சேர்ந்த அரசு பள்ளி மாணவ, மாணவியர்கள் வரைந்த ஓவியங்கள் கவர்னருக்கு பரிசாக அளிக்கப்பட்டது.

# சம்ஹிதா அகாடமியில் விளையாட்டு தின விழா



**கோவை, நவ. 2-**

கோவை மலுமிச்சம் பட்டி பகுதியில் உள்ள, சம்ஹிதா அகாடமியின் ஏழாம் ஆண்டு விளையாட்டு தின விழா, பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

முன்னதாக நடைபெற்ற இதன் துவக்க விழாவில்,பள்ளியின் முதல்வர் புஷ்பஜா கண்ணதாசன். தேசிய கொடியை ஏற்றி விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார். இதில் வாயு, அக்னி, பிருத்வி மற்றும் ஜல் என நான்கு அணிகளாக பள்ளி மாணவ,மாணவியர்கள் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்றனர்.

இதில் பள்ளி மாணவ, மாணவிகளின் அணிவகுப்பு நடைபெற்றது.

தொடர்ந்து விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் பள்ளியின் ஸ்போரட்ஸ் கேப்டன் மாணவர் ஞானராஜ் வரவேற்று பேசினார். தொடர்ந்து, தடகள போட்டிகள், சிலம்பம், கராத்தே, பிரமிடு, மாஸ்டர் டிரில் மற்றும் 200 மற்றும் 400 மீட்டர் ஓட்டப்பந்தயம் உள்ளிட்ட போட்டிகள் நடைபெற்றன.

விளையாட்டு தின நிகழ்ச்சிகளை உடற்கல்வி ஆசிரியர்கள் ஹரிதா மற்றும் காந்தி நாதன் ஒருங்கிணைத்தனர். இதில் ஆர்வமுடன் கலந்து கொண்ட மாணவ, மாணவிகள் அசத்தலாக தங்கள் திறமைகளை நிரூபித்தனர்.

அனைத்து போட்டிகளிலும் சிறந்து விளையாடிய அக்னி அணி அதிக புள்ளிகள் பெற்று ஒட்டு மொத்த சாம்பியன் கோப்பையை தட்டி சென்றது. முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய பள்ளி முதல்வர் புஷ்பஜா, மாணவர்களுக்கு விளையாட்டு என்பது மிகவும் முக்கியமான ஒன்று எனவும், எங்களது பள்ளியில் கல்வியோடு மாணவ, மாணவிகளின் விளையாட்டு திறன்களை ஊக்குவிக்கும் வகையில் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். விழாவில் மாணவ, மாணவிகள் பெற்றோர்கள், பள்ளி ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## காரைக்கால் கலெக்டரின் முயற்சியால்

# புதுச்சேரி விடுதலை நாள் விழாவில் தேசிய கொடி ஏற்றிய திருநங்கை



**காரைக்கால், நவ. 2-**

காரைக்காலில் கலெக்டரின் மற்றும் ஒரு சிறப்பான முயற்சியால் புதுச்சேரி விடுதலை நாள் விழாவை ஒட்டி திருநங்கை தேசிய கொடி ஏற்றி மரியாதை செய்தார்.

காரைக்கால் கடற்கரைச் சாலையில் நேற்று புதுச்சேரி விடுதலை நாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதன் ஒரு பகுதியாக காரைக்கால் மதகடி அருகே உள்ள பெருந்தலைவர் காமராஜர் நிர்வாகத்தில் நடைபெற்ற புதுச்சேரி விடுதலை நாள் விழாவை முன்னிட்டு, கலெக்டர் மணிகண்டன் முன்னிலையில், திருநங்கைகள் தேசிய கொடி ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்கள். நிகழ்ச்சியில் சமூக நலத்துறை உதவி இயக்குனர், கூட்டுறவுத்துறை அதிகாரிகள், மற்றும் அரசு துறை அதிகாரிகள், திருநங்கைகள், ஊழியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். விழாவில் கலெக்டர் மணிகண்டன் பேசியதாவது, சமூகத்தில் எந்த ஒரு குடிமக்களும் ஏற்றத்தாழ்வு கிடையாது. திருநங்கைகளுக்கு சமூகத்தில் பெரிய அளவில் அங்கீகாரம் கிடைக்க வேண்டும். வேறுபாடுகள் இல்லாமல் சமூகத்தில் நீங்கள் மதிக்கக் கூடிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை தெரியப் படுத்தவும் இந்த வாய்ப்பு இன்று உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. என்றார்.

தொடர்ந்து, விழாவில் கலந்து கொண்ட அனைத்து திருநங்கைகளுக்கும், கலெக்டர் மணிகண்டன் பொன்னாடை போர்த்தி சிறப்பித்தார். இறுதியாக, புதுச்சேரி விடுதலை நாள் விழாவை முன்னிட்டு தேசிய கொடியை ஏற்றி வைக்க வாய்ப்பளித்த மாவட்ட கலெக்டர் மணிகண்டனுக்கு திருநங்கைகள் நன்றி தெரிவித்தார்கள்.

# தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



**சுவாமிமலை, நவ. 2-**

தேசியத் தலைவர் திரு முத்துராமலிங்க தேவர் குருபூஜை முன்னிட்டு கும்பகோணம் ஆசூர் பைபாஸ் சாலையில் உள்ள தேவர் சிலைக்கு சிவ சேனா கட்சி மற்றும் நேதாஜி நலச்சங்கம் சார்பாக ஊர்வலமாக வந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இதைத்தொடர்ந்து வேலை வாய்ப்பு முகாம், அன்னதானம், பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம், ரத்ததான முன்பதிவு முகாம் நடத்தப்பட்டது.

சிவ சேனா கட்சி மாநில துணைத்தலைவர் பூக்கடை ஆனந்த் முன்னிலையில் நேதாஜி நல சங்க ஒருங்கிணைப்பாளர் சபரி தேவர் தலைமையில் சிவசேனா மற்றும் நேதாஜி நலச்சங்கம் சார்பாக நடைபெற்றது.

# முதியோர் குழுக்களை சிறப்பிக்கும் நிகழ்ச்சி



**நாமக்கல், நவ. 2-**

நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் அரசினர் மகளிர் கலைகல்லூரியில் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா தலைமையில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் உலக முதியோர் தினத்தை முன்னிட்டு, மாவட்ட அளவிலான முதியோர் குழுக்களை சிறப்பிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, குடும்ப மற்றும் சமுதாய வளர்ச்சியில் முதியோரின் பங்கை அங்கீகரிக்கவும், அவர்களின் வாழ்வில் கண்ணியத்தை காக்கவும் மற்றும் பிரச்சனைகளை வெளிகொணர்ந்து சரி செய்யவும் உலக முதியோர்தினமானது ஆண்டுதோறும் அக்டோபர் 1தேதி உலக அளவில் கொண்டாடப் படுகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் மொத்தம் 754 முதியோர் குழுக்களில்4, 545 உறுப்பினர்கள் உள்ளனர். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதரா இயக்கத்தின் மூலம் ஆதார நிதியாக ஒரு குழுவிற்கு ரூ.15,000 வீதம் 430 முதியோர் குழுக்களுக்கு ஆதார நிதி வழங்கப்பட்டுள்ளது.

முதியோர் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் மேற்கொண்டு வரும் வாழ்வாதார செயல் மேம்பாட்டிற்காக ஒரு குழுவிற்கு ரூ1,00,000 வழங்கப்படுகிறது. இதுவரை 51 முதியோர் குழுக்களுக்கு வாழ்வாதார நிதியாக ரூ.51 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிதியிலிருந்தும், வங்கிகளிலும் இருந்தும் வாழ்வாதார செயல்பாடுகளில் ஈடுபடும் முதியோர் குழுக்களுக்கு கடன் இணைப்பு பெற்று தரப்படுகிறது.

முதியோர்கள் தங்களுக்கு பிடித்ததை செய்து மனமகிழ்ச்சியுடனும், இயற்கை உணவுகளை உட்கொண்டு ஆரோக்கியமாகவும் இருக்க வேண்டும். இன்றைய காலத்தில் உணவு பழக்க வழக்கங்கள் பெரிய அளவில் மாறி உள்ளதால் பல்வேறு உடல்நல குறைபாடுகள் ஏற்படுகிறது. நீங்கள் உங்களால் முடிந்தவாறு ஆடு, கோழி வளர்ப்பு மற்றும் சிற்றுண்டி கடை போன்ற சுயதொழில் செய்து வருவாய் ஈட்டி மனமகிழ்ச்சியுடன் வாழவேண்டும்.

இன்றைய வாழ்க்கை முறையில் தங்களுக்கு இருக்க ஓர் பாதுகாப்பான இடம், உண்ண உணவு, உடை, மருத்துவம் இவையே முக்கியம். முதியோர்கள் தங்கள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்திட வேண்டும். அரசு மருத்துவமனைகளில் அனைத்து விதமான சிகிச்சைகளும் நவீன வசதிகளுடன் தரமாக வழங்கப்படுகிறது. எனவே, தங்கள் உடல் நிலையை பரிசோதனை செய்து தேவையான சிகிச்சை பெற்று நோயின்றி வாழவேண்டும். தங்கள் பேரன், பேத்திகளுடன் மகிழ்ச்சியாக வாழவேண்டும். தங்கள் அனைவருக்கும் எனது தீபாவளி பண்டிகை வாழ்த்துகள் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் உலக முதியோர் தினத்தை முன்னிட்டு, மாவட்ட அளவிலான முதியோர் குழுக்களை சிறப்பிக்கும் விதமாக மாவட்ட ஆட்சித் தலைவர் முதியோர்களுக்கு சால்வை அணிவித்து, பரிசுகளை வழங்கினார். மேலும், சிறப்பாக செயல்பட்டு வரும் 16 மாவட்ட அளவிலான முதியோர் குழுக்களை சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (மகளிர்திட்டம்) செல்வராசு, முதியோர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## செஞ்சி அடுத்த ஆலம்பூண்டியில்

# மாற்றுத்திறனாளிகளுடன் ஓசையில்லா தீபாவளி விழா




**செஞ்சி, நவ. 2-**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் ஆலம்பூண்டி கிராமத்தில் மிராக்கில் டிரஸ்ட் மூலம் மாற்றுத்திறனாளிகளுடன் ஓசையில்லா தீபாவளி விழா கொண்டாடப் பட்டது. மேலும் பறவைகள் மற்றும் வனவிலங்குகள் அச்சம் இன்றி வாழ ஓசையில்லா விழா கொண்டாட விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது. நிறுவனர் அம்புரோஸ் வரவேற்றார். ஆலம்பூண்டி செயின்ட் ஜோசப் சர்ச் முதல் பங்குத் தந்தை அருட்பணி அசோக் குமார் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு இனிப்பு கள் வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

# முருகன் கோவில்களில் கந்தசஷ்டி விழா கொடியேற்றத்துடன் தொடங்கியது

புதுச்சேரி, நவ. 2-

புதுச்சேரியில் உள்ள முருகன் கோவில்களில் கந்தசஷ்டி விழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. புதுவை லாஸ்பேட்டை சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் கந்தசஷ்டி சூரசம்ஹார விழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதையொட்டி நேற்று மாலை 6 மணிக்கு விக்னேஸ்வர பூஜை, கணபதி ஹோமம், வாஸ்து சாந்தி, விநாயகர் அபிஷேகம், மிருத் சங்கரணம் நடைபெற்றது. 2ம் தேதியான இன்று நண்பகல் 2:30 மணிக்கு முருகன் கலச பிரதிஷ்டையும், யாகசாலை பூஜைகள் ஆரம்பம். மாலை 6 மணிக்கு கொடியேற்றம் நிகழ்ச்சியுடன் கந்தசஷ்டி விழா தொடங்குகிறது. விழாவையொட்டி காலை, இரவு வேலைகளில் சாமி பல்வேறு வாகனங்களில் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். முக்கிய நிகழ்ச்சியாக 6ம் தேதி இரவு 8 மணிக்கு அன்னையிடம் இருந்து சக்திவேல் வாங்குதல் நிகழ்ச்சியும் நடக்கிறது. விழாவில் சிகர நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் வருகிற 7ம் தேதி இரவு 8 மணிக்கு விஸ்வரூபம் காட்டி முருகப்பெருமான் சூரனை சம்ஹாரம் செய்து, சேவலும் மயிலுமாக ஆட்கொள்ளுதல் நடக்கிறது. அன்று அதிகாலை 5:30 மணிக்கு உபயதாரர் சங்கல்பம், மூலவர் மற்றும் உற்சவர் அபிஷேகம், 6



மணிக்கு கம்பம் பூஜை, 7 மணிக்கு தீபாராதனை, 9 மணிக்கு விநாயகர், நவ வீரர்களுடன் முருகப்பெருமான் ஆட்டுக்கிடா வாகனத்தில் வீதி உலா நடக்கிறது இதனை. தொடர்ந்து இரவு 8 மணிக்கு முருகப்பெருமான் சூரனை சம்ஹாரம் செய்யும் நிகழ்ச்சி நடக்கிறது. தொடர்ந்து இரவு 10 மணிக்கு முருகப்பெருமான் தங்க மயில் வாகனத்தில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார்.

8ம் தேதி மாலை 6 மணிக்குதிருக்கல்யாணமும், இரவு 9 மணிக்கு முத்துப் பல்லக்கு விதிஉலாவும், 9ம் தேதி இரவு 7 மணிக்கு மஞ்சள் நீர் உற்சவமும், 10ம் தேதி மாலை 6 மணிக்கு ஊஞ்சல் உற்சவமும், 11ம் தேதி இரவு 7 மணிக்கு உற்சவ சாந்தி நிகழ்ச்சியும் நடக்கிறது. புதுவை ரயில் நிலையம் அருகே உள்ள கவுசிக பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலில் 72ம் ஆண்டு பிரம்மோற்சவம் மற்றும் கந்தசஷ்டி நிகழ்ச்சி நேற்று விநாயகர் பூஜையுடன் தொடங்கியது. இன்று காலை 8 மணிக்கு கொடியேற்ற நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவையொட்டி காலை, மாலையில் பல்வேறு வாகனங்களில் சாமி வீதி உலா நடக்கிறது. 6ம் தேதி காலை தேரோட்டம், 7ம் தேதி இரவு சூரசம்ஹாரம், 8ம் தேதி காலை 9 மணிக்கு மேல் கவுசிக பாலசுப்ரமணியன், வள்ளி தெய்வானைக்கு திருக்கல்யாணம், இரவு 8 மணிக்கு தங்கமயில் வாகனத்தில் வீதியுலா நடக்கிறது.

இதனைத் தொடர்ந்து 11ம் தேதி காலை 9 மணிக்கு மேல் கடல் தீர்த்தவாரி, 12ம் தேதி இரவு 8 மணிக்கு காந்தி வீதி வேதபுரீஸ்வரர் கோவிலில் தெப்பல் உற்சவம் மற்றும் 13ம் தேதி முதல் 17ம் தேதி வரை பல்வேறு வாகனங்களில் சாமி வீதி உலாவும், 18ம் தேதி காலை வீரபாகு உற்சவமும், இரவில் சண்டிகேஸ்வரர் உற்சவமும், 19ம் தேதி இரவு ஊஞ்சல் உற்சவமும் நடக்கிறது.

சாரம் முத்து விநாயகர், வள்ளி தேவசேனா சமேத சுப்ரமணியசாமி, நாகமுத்து மாரியம்மன் கோவிலில் கந்தசஷ்டி சூரசம்ஹார பிரம்மோற்சவ விழா இன்று தொடங்கி, 14ம் தேதி வரை நடக்கிறது. இதையொட்டி நேற்று மாலை 6 மணிக்கு விக்னேஸ்வர பூஜை, வாஸ்து சாந்தியும், இன்று காலை 7 மணிக்கு அபிஷேகம் மற்றும் விக்னேஸ்வர பூஜை, காலை 10:30 மணிக்கு காப்பு கட்டுதல் கொடியேற்றம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை தொடர்ந்து தினமும் மாலை 5 மணிக்கு மகாபிஷேகமும், இரவு 7 மணிக்கு யாகசாலை பூஜை ஆரம்பம், இரவு 8 மணிக்கு மகா பூர்ணாஹூதி, தீபாராதனை மற்றும் பல்வேறு வாகனங்களில் சுவாமி விதியுலா நடக்கிறது. முக்கிய நிகழ்வாக, வரும் 7ம் தேதி இரவு 7 மணிக்கு சக்திவேல் வாங்குதல், ஆட்டு கிடா வாகனத்தில் சூரசம்ஹாரமும், 8ம் தேதி இரவு 7 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும், 10ம் தேதி காலை 8:30 மணிக்கு திருத்தேர் வடம் பிடித்தல், இரவு 7 மணிக்கு கோவில் குளத்தில் தெப்ப உற்சவம் நடக்கிறது.

விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாக அதிகாரி நீலகண்டன், கோவில் அர்ச்சகர்கள், சிவராம சிவாச்சாரியார், கார்த்திகேய குருக்கள், உதவி தம்புரார் முத்துக்குமாரசாமி ஆகியோர் செய்து வருகின்றனர். இதேபோல காராமணிக்குப்பம் சுப்பிரமணியர் கோவில், கதிர்காமம் முருகன் கோவில், முதலியார் பேட்டை முத்துக்குமாரசாமி கோவில், அரியாங்குப்பம், வில்லியனூர், திருக்கனூர், காலாப்பட்டு, பிள்ளைச்சாவடி பகுதியில் உள்ள முருகன் கோவில்களில் கந்தசஷ்டி விழா வெகு விமர்சையாக தொடங்கியது.

# அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் தூய்மை நிகழ்ச்சி




புதுக்கோட்டை, நவ. 2-

புதுக்கோட்டை மாவட்ட நேரு யுவகேந்திரா மற்றும் கந்தர்வகோட்டை அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்டம் ஆகியவை இணைந்து நடத்திய தீபாவளியுடன் மை பாரத் எனும் தூய்மை மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி கந்தர்வக் கோட்டையில் நடைபெற்றது.

மத்திய அரசின் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் எமது இளைய பாரதம் (மை பாரத்) எனும் துறை துவங்கி முதலாம் ஆண்டு நிறைவினை குறிக்கும் வகையிலும் தூய்மையான பாரதம் என்பதனை வலியுறுத்தும் வகையிலும் தீபாவளி திருநாளை தூய்மையாக கொண்டாடுதலை நோக்கமாகக் கொண்டு கந்தர்வகோட்டை நகர வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் ஒத்துழைப்புடன் தூய்மை நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் தூய்மை பராமரித்தல் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும், மை பாரத் அடையாள சின்னங்களும். பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் கந்தர்வகோட்டை அரசினர் பாலிடெக்னிக் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் செல்வகுமார், நேரு யுவகேந்திரா தேசிய இளையோர் தொண்டர்கள், கஸ்தூரி மற்றும் திருமணி ஆகியோர் பங்கேற்று சிறப்பாக செய்திருந்தனர்.

# குமரி தந்தை மார்ஷல் நேசமணி திருவுருவ சிலைக்கு ஆட்சியர் மாலை



கன்னியாகுமரி, நவ. 2-

கன்னியாகுமரி மாவட்டம் தாய்தமிழகத்துடன் இணைந்த நாளை கொண்டாடும் வகையில் தமிழ்நாடு அரசின் ஆணைக்கிணங்க கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வேப்பமூடு பகுதியில் அமைந்துள்ள குமரி தந்தை மார்ஷல் நேசமணி திருவுருவ சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ், கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய்வசந்த், குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் பிரின்ஸ் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் இருந்த கன்னியாகுமரி மாவட்டம், தாய்த் தமிழகத்துடன் இணைந்த நாளான நவம்பர் 1ஆம் தேதி அன்று அரசு விழாவாக கொண்டாடுவதற்கு தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்ததன் அடிப்படையில், தாய்த மிழகத்துடன் கன்னியாகுமரி மாவட்டம் இணைவதற்கு பாடுபட்டவர்களில் ஒருவரான குமரித் தந்தை மார்ஷல் நேசமணி மணிமண்டபத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் இருந்தபோது நமது தாய்த்தமிழகத்தோடு கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட இன்றைய விளவங்கோடு, கல்குளம், அகஸ்தீஸ்வரம், தோவாளை, கிள்ளியூர், திருவட்டார் உள்ளிட்ட வட்டங்களை இணைப்பதற்கு அரும்பாடுபட்டவர்களில் குமரி தந்தை மார்ஷல் நேசமணி பணி முக்கியமானது. மார்ஷல்நேசமணியுடன் இணைந்து போராடியவர்களில் பொன்னப்பன் நாடார், குஞ்சன்நாடார், சைமன், தாணுலிங்கநாடார், சிதம்பரநாதன், சிதம்பரம்பிள்ளை, மாதேவன்பிள்ளை, டேனியல், ஹுசைன், அப்துல்காதர், டாக்டர். கிருஷ்ணன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்தியா விடுதலை பெற்ற பின்னரும், திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் இருந்த குமரி மாவட்டத்தை, தமிழ்நாட்டுடன் இணைக்க பல போராட்டங்களை நடத்தியதன் விளைவாக, 1956ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1ஆம் தேதி கன்னியாகுமரி மாவட்டம், தாய்த் தமிழகத்துடன் இணைக்கப்பட்டது.

இதனை நினைவுகூறும் வகையில், ஒவ்வொருவருடமும் குமரி மாவட்டம் தாயதமிழகத்துடன் இணைந்த நவம்பர் 1ஆம் தேதி அன்று கன்னியாகுமரி மாவட்டம், வேப்பமூடு பகுதியில் அமைந்துள்ள மார்ஷல் நேசமணி மணிமண்டபத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு மலர்தூவி, மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப் படையில், தமிழக அரசின் சார்பில் மார்ஷல் நேசமணிமணி திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தப் பட்டது.

இவ்வாறு தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் மேரிபிரின்சிலதா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஜாண்ஜெகத்பிரைட், மண்டல தலைவர் ஜவகர், கன்னியாகுமரி மாவட்ட கோவில்களின் அறங்காவலர் குழுத்தலைவர் பிரபா ராமகிருஷ்ணன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) செல்வலெட்சுஷ்மா, அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் முருகன், மார்ஷல் நேசமணி மகன் வழிபேரன் ரெஞ்சித் அப்பலோஸ், தமயந்திநளதம், மாநகராட்சி உறுப்பினர்கள் நவீன்குமார், விஜிலா ஜஸ்டஸ், வழக்கறிஞர், சதாசிவம், ராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் சரவணன் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

தினமும் மாலையில்
மாலை எக்ஸ்பிரஸ்
படியுங்கள்

# சத்தியமங்கலத்தில் கல்லறை திருவிழா



நவம்பர், நவ. 2-

உலகம் முழுவதும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களால் நவம்பர் 2ந்தேதி கல்லறை திருநாள் அனுசரிக்கப்படுகிறது அன்றைய தினம் இறந்த தங்கள் முன்னோர்களின் ஆன்மா இளைப்பாறுதல் பெறவேண்டி கல்லறையில் சிறப்பு வழிபாடு நடத்துவது வழக்கம்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் சத்தியமங்கலம் கிராமத்தில் கல்லறை திருவிழா இறந்த தங்கள் முன்னோர்களின் ஆன்மா இளைப்பாறுதல் பெறவேண்டி கல்லறையில் சிறப்பு வழிபாடு நடத்துவது வழக்கம்.செஞ்சி அடுத்த சத்தியமங்கலத்தில் கல்லறை தோட்டத்தில் சத்தியமங்கலம் பங்கு தந்தை ஏ. சிறில் தலைமையில் மண்ணின் மைந்தர்கள் ரட்சகதாஸ், பாலசிங்கம் இவர்களால் கல்லறை தோட்டத்தில் கூட்டுத் திருப்பலி நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு கல்லறைகளாக சென்று தீர்த்தம் தெளித்து தூப ஆராதனை காண்பித்து ஆசீர்வதிக்கப்பட்டது. இதில் ஏராளமான சத்தியமங்கலம் பங்கு இறை மக்கள் கலந்து கொண்டு தங்களுடைய தந்தை, தாய் உறவினர்களின் கல்லறையில் நின்று கண்ணீர் விட்டு ஜெபம் செய்தனர்.

# காரைக்கால் அரசு மருத்துவமனையில் தீவிர உயிர் காக்கும் சிகிச்சை பிரிவு கட்டும் பணி துவங்க உள்ளது

## அமைச்சர் பிஆர்என் திருமுருகன் தகவல்

காரைக்கால், நவ. 2-

காரைக்கால் அரசு பொது மருத்துவமனை 50 படுக்கை வசதிகள் கொண்ட தீவிர உயிர் காக்கும் சிகிச்சை பிரிவுக்கான கட்டிடம் கட்டும் பணி 16 கோடியே 63 லட்சம் செலவில் துவங்க உள்ளது.

என, புதுச்சேரி குடிமைப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் பிஆர்என் திருமுருகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி அரசின் 71 வது விடுதலை நாள் விழா, நேற்று காரைக்கால் கடற்கரை சாலையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு, புதுச்சேரி குடிமைப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் பிஆர்என் திருமுருகன் தலைமை தாங்கி, தேசியக்கொடியை ஏற்றி வைத்து, போலீசாரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து, அமைச்சர் பிஆர்என் திருமுருகன் சமாதான புறாவை பறக்கவிட்டு பேசியதாவது: நம்முடைய இந்த விடுதலை எண்ணற்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகத்தால் விளைந்த விடுதலை. காரைக்கால் மாவட்டத்தில் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை மூலம் பல்வேறு சீரிய திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்த ஆண்டு சம்பா, தாள்டி நெல் சாகுபடி ஊக்குவிக்கும் வகையில் 70.79 டன் சான்று நெல் விதைகள் பொதுப்பிரிவு விவசாயிகளுக்கு ஒரு கிலோவிற்கு 10 ரூபாயும், அட்டவணை இன விவசாயிகளுக்கு 75% மானியத்திலும் காரைக்கால் மாவட்டத்தில் இயங்கும் அரசு விதை பண்ணை பண்டித ஜவர்கலால் நேரு விவசாயக் கல்லூரி, வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் வேளாண் உற்பத்தியாளர் நிறுவனம் மூலம் வழங்கப்பட்டது. அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கப் பட்டுள்ளது. அரசு பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு இலவச மழை கோர்ட் வழங்கப்பட்டுள்ளது. ராஜீவ் காந்தி காலை உணவு திட்டத்தின் கீழ் ஏப்ரல் 23 முதல் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள 107 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள மாணவ, மாணவிகளுக்கு 100 மில்லி சூடான பால் வழங்கப்பட்டு வருகிறது. இலவச பாட புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், சீருடைகள் அதற்கான தையல் கூலிகள் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள 107 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட சுமார் 17 ஆயிரத்து 500 மானம் மாணவிகள்ளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த இனிய நாளில் அவருடைய தியாகங்களை நினைத்து போற்றுவது நம்முடைய முக்கிய கடமையாகும். இந்த நேரத்தில் நமது முதலமைச்சர் ரங்கசாமி நோக்கத்தின் படி நமது அரசு விவசாயம், வணிகம், கல்வி, ஆன்மீகம், வேலை வாய்ப்பு சுற்றுலா ஆகிய துறைகளில் சிறந்த புதுச்சேரியாக மாற்ற தேவையான அனைத்து நல்ல கட்டமைப்புகளையும் நமது முதலமைச்சர் தலைமையில் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. சமூக நலத்துறை மூலமாக மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2967 மாற்றுத்திறனாளிகளுக்கு நிதி உதவி அளிக்கப் பட்டு வருகிறது. மேலும் அனைத்து மாற்று திறனாளிகளுக்கும் அக்டோபர் மாதம் முதல் ஆயிரம் ரூபாய் உயர்த்தி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. காரைக்கால் மீனவர்கள் கட்டுமரம் வாங்கிட 50% மானியமாக 75 ஆயிரம் ரூபாய் வீதம் 20 படங்களுக்கு ரூபாய் 15 லட்சம் மானிய தொகை வழங்கப்பட உள்ளது. மீனவர்கள் தங்களது விசைப்படகு செலவிடும் டீசலுக்கு அதிகபட்சமாக லிட்டருக்கு ரூபாய் 12 திருப்பி தரப்படுகிறது. மேலும், முதியோர் உதவித்தொகை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. காரைக்கால் திருப்பட்டினம் இரு வழி புறவழிச் சாலையினை ரூபாய் 5 கோடிய 63 லட்சம் செலவில் அகலப்படுத்தி அபிவிருத்தி செய்யப் பட்டுள்ளது. மேலும் காரைக்கால் அண்ணா அரசு கலைக் கல்லூரி, அவ்வையார் அரசு மகளிர் கல்லூரிக்கு கூடுதல் அவகுப்பறைகள் கட்டப் பட்டுள்ளது. காரைக்கால் அரசு பொது மருத்துவ மனை 50 படுக்கை வசதிகள் கொண்ட தீவிர உயிர் காக்கம் சிகிச்சை பிரிவுக் கான கட்டிடம் கட்டும் பணி 16 கோடியே 63 லட்சம் செலவிலும், முக்கியமாக ஏழை, எளிய மக்களின் அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்தி அவர்களுடைய கல்வி கலாச்சாரம் சுகாதாரம் வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு அத்தியாவசியமான திட்டங்களை செயல்படுத்தி அதனை மேம்படுத்த எங்களுடைய அரசு முனைப்போடு செயல்படுத்தி வருகிறது. காரைக்கால் மாவட்டத்தை சிறந்த ஆன்மீக தலமாகவும், சிறந்த சுற்றுலாத்தலமாகவும் தொழில் நகரமாகவும் மேம்படுத்த பல்வேறு நலத்திட்டங்களை எங்கள் அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது என்றார். தொடர்ந்து, பள்ளி மாணவர்களின் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவில், காரைக்கால் மாவட்ட கலெக்டர் மணிகண்டன், துணை கலெக்டர் செந்தில்நாதன், போலீஸ் சூப்பிரண்டுகள் சுப்பிரமணியன், பாலசந்தர், செய்தித்துறை உதவி இயக்குனர் குலசேகரன் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள், திரளான தியாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



# மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் அமாவாசை ஊஞ்சல் உற்சவம்



**மேல்மலையனூர், நவ. 2–**

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் ஐப்பசி மாத அமாவாசை ஊஞ்சல் உற்சவம், விமரிசையாக நடைபெற்றது. இதை முன்னிட்டு அதிகாலை மூலவர் அங்காளம்மனுக்கு பால், தயிர், இளநீர், தேன் கொண்டு சிறப்பு அபிஷேகம் ஆராதனையும் நடைபெற்றது. தொடர்ந்து உற்சவர் அங்காளம்மனுக்கு பலவிதமலர்களை கொண்டு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு இரவு 11.05 மணிக்கு உற்சவர் ஊஞ்சல் மண்டபத்தில் எழுந்தருளித்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். அப்போது ஊஞ்சல் மண்டபம் எதிரில் இருந்த லட்சக்கணக்கான பக்தர்கள், 'அங்காளம்மா, அங்காளம்மா, என கரகோஷத்துடன் தீபம் ஏற்றி அம்மனை வழிபட்டனர். தொடர்ந்து கோவில் பூசாரிகள் அங்காளம்மனை வாழ்த்தி தாலாட்டு பாடல் பாடினர். ஊஞ்சல் உற்சவத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், மாநிலங்களில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடு களை இந்து சமய அற நிலையத்துறை உதவி ஆணையர் ஜீவானந்தம், அறங்காவலர் குழுத்தலைவர் மதியழகன், அறங்காவலர்கள், மற்றும் கோவில் பணியாளர்களும் செய்திருந்தனர். பாதுகாப்பு பணியில் 500க்கும் மேற்பட்ட காவலர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# இன்று முதல் சென்னைக்கு சிறப்பு பஸ்கள் இயக்கம்




**சென்னை, நவ. 2–**

தீபாவளி பண்டிகையை கொண்டாட சென்னையில் வசிக்கும் வெளி மாவட்ட மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்றனர். சென்னையில் இருந்து பஸ், ரயில்கள் மூலம் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் சொந்த ஊர் சென்றனர். இதனால், தீபாவளி பண்டிகை முடிந்து சென்னை, வழக்கமான பரபரப்பு இன்றி காணப்படுகிறது. இதனிடையே, சொந்த ஊர் சென்ற மக்கள் சென்னை திரும்ப வசதியாக இன்று முதல் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன. இது தொடர்பாக தமிழக அரசின் விரைவு போக்குவரத்து கழகத்தின் மேலாண்மை இயக்குனர் ஆர்.மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தீபாவளி பண்டிகை முடிந்த பின்னர், பிற ஊர்களில் இருந்து சென்னைக்கு வரும் பயணிகளின் வசதிக்காக 2ந்தேதி (இன்று) முதல் 4ந்தேதி வரையில் தினந்தோறும் இயக்கக்கூடிய 2 ஆயிரத்து 92 பஸ்களுடன் 3 ஆயிரத்து 165 சிறப்பு பஸ்களும், பிற முக்கிய ஊர்களிலிருந்து 3 ஆயிரத்து 405 பஸ்கள் என மொத்தம் 12 ஆயிரத்து 846 பஸ்கள் இயக்கப்படும். எனவே, பயணிகள் கடைசி நேர கூட்ட நெரிசலில் பயணிப்பதை தவிர்த்து, தங்கள் பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு காலியாக உள்ள இருக்கைகளில் முன்பதிவு செய்து பயணிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஏழை மாணவனின் தங்கும் விடுதி செலவை ஏற்ற முன்னாள் மாணவர்கள்

## அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நெகிழ்ச்சி



**சிதம்பரம், நவ. 2–**

சிதம்பரம், அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவனின் நான்கு வருட முழு தங்கும் விடுதி செலவையும் ஏற்ற முன்னாள் மாணவர்கள். மாணவர்களுக்கு இடையேயான சமூக உறவை மேம்படுத்தும் வகையில் இந்த

நெகிழ்ச்சியூட்டும் செயல் உள்ளதாக அனைவரும் பெருமிதம். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத் தில், 1994 –1998 ம் கல்வி ஆண்டில் மின்னணு மற்றும் கருவியல் துறையில் பயின்ற முன்னாள் மாணவர்கள் ஒன்றிணைந்து தாங்கள் படித்த பல்கலைக்கழகத்திற்கும் அங்கு படிக்கும் மாணவர்களுக்கும் தங்களால் இயன்றதை செய்ய வேண்டும் என்பதற்காக தங்கும் விடுதி கட்டண செலவை கட்ட முடியாமல் தவித்த மாணவரின் முழு தங்கும் விடுதிச் செலவையும் ஏற்றனர். பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவர் பிரகாஷ் ராஜ். இவரின் தந்தை பார்வை இழந்த நிலையில் குடும்பத்தின் பொருளாதார சுமையை சமாளிக்க இயலாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் பிரகாஷ் ராஜ் தன் கல்வியை தொடர்வதில் சிரமப்பட்டார். இதையறிந்த முன்னாள் மாணவர்கள் பிரகாஷ் ராஜின் முதலாம் ஆண்டு தங்கும் விடுதி கட்டண தொகையான 55 ஆயிரம் ரூபாய் தொகையை நன்கொடையாக வழங்கியதோடு, அவரின் நான்கு வருட தங்கும் விடுதிக்கான முழு செலவையும் தாங்களே ஏற்று கொள்வதாக தெரிவித்துள்ளனர். மேலும் படிப்பு ரீதியாகவும், படித்து முடித்த பிறகு வேலைக்கான அத்துனை உதவியையும் செய்வதாக உறுதியளித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் கதிரேசன் கலந்து கொண்டு முன்னாள் மாணவர்களின் செயலை பாராட்டினார். அவருடன் பொறியியல் புல முதல்வரும், பேராசிரியருமான கார்த்திகேயன், உள் தர கட்டுப்பாட்டு மைய இயக்குனர் மற்றும் பேராசிரியர் அறிவுடைநம்பி மற்றும் மின்னணு மற்றும் கருவியல் துறையின் பேராசிரியர் மற்றும் இயக்குநர் சக்திவேல் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு உற்சாகத்தையும், நம்பிக்கையையும் அளித்தனர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர்களுக்கும், தற்போதைய மாணவர்களுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தும் இந்த உணர்வு, மாணவர்களுகிடையில் நிலைத்து நிற்கும் சமூக உணர்வு மற்றும் ஒற்றுமையின் அடையாளமாக கருதப்படுகிறது. தங்கள் மாணவர்களின் எதிர்காலத்தை வளமாக்க உதவிய முன்னாள் மாணவர்களுக்கு அண்ணாமலை பல்கலைக்கழக நிர்வாகம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து கொள்கிறது.

# முன்னாள் படை வீரர்களுக்கான அடையாள சான்றிதழை டிஜிட்டல் முறையில் பெறும் முகாம்




வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சுப்புலெட்சுமி முன்னாள் படை வீரர்களுக்கான வாழ்நாள் அடையாளச் சான்றிதழை டிஜிட்டல் முறையில் பெறுவதற்கான முகாமை முன்னாள் படை வீரர்கள் நல அலுவலகத்தில் தொடங்கி வைத்து, முன்னாள் படை வீரர்களுக்கான வாழ்நாள் அடையாளச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சென்னை துணை பாதுகாப்பு கணக்குகள் கட்டுப்பாட்டாளர் திலிப் குமார், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் பாலசுப்பிரமணியன், மற்றும் முன்னாள் படைவீரர்கள் கலந்துகொண்டனர்.

# சூரசம்ஹார விழா-திருச்செந்தூர் செல்ல புதுச்சேரி அரசு சிறப்பு பஸ்கள் இயக்கம்

**புதுச்சேரி, நவ. 2–**

திருச்செந்தூர் சூரசம்ஹார விழாவை முன்னிட்டு புதுச்சேரி, காரைக்காலில் இருந்து புதுச்சேரி அரசின் பி.ஆர். டி.சி., சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன.

திருச்செந்தூர் சூரசம்ஹார விழாவையொட்டி புதுச்சேரியில் இருந்து திருச்செந்தூருக்கு 6ந் தேதி இரவு 7 மணிக்கு பி.ஆர்.டி.சி., சிறப்பு பஸ் இயக்கப்படுகிறது. பயண கட்டணம் முன்பதிவு உள்பட ரூ.700 ஆகும்.

இதேபோல் மறுநாள் 7ந் தேதி திருச்செந்தூரில் இருந்து புதுச்சேரிக்கு பி. ஆர்.டி.சி., பஸ் இரவு 9:30 மணிக்கு புறப்படுகிறது. பயண கட்டணம், முன்பதிவுடன் ரூ.700 ஆகும். இந்த பஸ் விழுப்புரம், திருச்சி மதுரை, தூத்துக்குடி வழித்தடத்தில் செல்லும். காரைக்காலில் இருந்தும் திருச்செந்தூருக்கு 6ந் தேதி இரவு 9 மணிக்கு பி.ஆர்.டி.சி., பஸ் இயக்கப்படுகிறது. பயண கட்டணம், முன்பதிவு ரூ.500 ஆகும். இதே போல் திருச்செந்தூரில் இருந்து காரைக்காலுக்கு மறுநாள் 7ந் தேதி இரவு 9.30 மணிக்கு சிறப்பு பஸ் இயக்கப்படுகிறது. இந்த பஸ் பட்டுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி வழியாக இயக்கப்படும். புதுச்சேரி மற்றும் காரைக்கால் பஸ் நிலையத்தில் உள்ள பி.ஆர்.டி.சி., பயண சீட்டு முன் பதிவு மையம் மற்றும் பஸ் இந்தியா செயலி வழியாக பக்தர்கள் திருச்செந்தூர் மட்டும் செல்ல முன்பதிவு செய்து கொள்ளலாம் என பி.ஆர்.டி.சி., நிர்வாகம் அறிவித்துள்ளது.

# கும்பக்கரை அருவியில் திடீர் வெள்ளப்பெருக்கு: சுற்றுலா பயணிகள் குளிக்க தடை

**தேனி, நவ. 2–**

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் இயற்கை எழில் சூழ கும்பக்கரை அருவி அமைந்துள்ளது. அருவிக்கு திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மலைப்பகுதியில் மழை பெய்தால் நீர்வரத்து ஏற்படும். இந்த அருவியில் நீர்வரத்து அதிகமாக இருந்ததால் குளிக்க தடை விதித்திருந்தனர்.

இந்த நிலையில் நீர்வரத்து சீரானதால் கடந்த 5 நாட்களுக்கு முன்பு சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறையினர் அனுமதி அளித்தனர். தீபாவளி பண்டிகை தொடர் விடுமுறையையொட்டி நேற்று காலையில் அருவியில் நீராடுவதற்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர்.

இந்த நிலையில் அருவியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான வட்டக்கானல், பாம்பாறு மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நேற்று மதியம் கனமழை பெய்தது. இதனால் அருவியில் திடீரென்று வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

உடனே அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த வனத்துறையினர் அருவியில் குளித்துக் கொண்டிருந்த சுற்றுலா பயணிகளை வெளியேற்றினர். இதன் காரணமாக நேற்று மதியம் முதல் சுற்றுலா பயணிகளை குளிக்கவும், அருவிக்கு செல்லவும் வனத்துறையினர் தடை விதித்தனர். இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

# தண்டவாளத்தில் கற்கள்: பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயிலை கவிழ்க்க மீண்டும் சதியா?




**தென்காசி, நவ. 2–**

தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் இருந்து தினமும் சென்னைக்கு பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயில் இயக்கப்படுகிறது. அதன்படி செங்கோட்டையில் இருந்து நேற்று முன்தினம் மாலை 6.20 மணிக்கு வழக்கம்போல் ரெயில் புறப்பட்டு சென்றது.

இரவு 7 மணியளவில் கடையநல்லூரைக் கடந்து போகநல்லூர் பகுதியில் ரெயில் சென்று கொண்டிருந்தது. அப்போது அங்கு தண்டவாளத்தின் நடுவில் முறையே சுமார் 10 கிலோ, 15 கிலோ எடை கொண்ட 2 பெரிய கற்கள் வைக்கப்பட்டு இருந்தன. இதைப் பார்த்து என்ஜின் டிரைவர் அதிர்ச்சி அடைந்தார். அந்த சமயத்தில் ரெயில் மெதுவாக சென்று கொண்டிருந்ததால் அவர் ரெயிலை உடனடியாக நிறுத்தினார்.

ரெயில் நின்றதும் கீழே இறங்கி சென்ற என்ஜின் டிரைவர், தண்டவாளத்தின் நடுவில் இருந்த பெரிய கற்களை அகற்றினார். பின்னர் ரெயிலை ஓட்டிச் சென்ற அவர், இதுகுறித்து ரெயில்வே கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தார். தண்டவாளத்தில் இருந்த பெரிய கற்களைப் பார்த்ததும் என்ஜின் டிரைவர் சரியான நேரத்தில் ரெயிலை நிறுத்தியதால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

இதையடுத்து ரெயில்வே போலீஸ் சூப்பிரண்டு ராஜன் தலைமையில், துணை சூப்பிரண்டு இளங்கோவன், இன்ஸ்பெக்டர் செல்வி மற்றும் போலீசார் நேற்று காலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அப்பகுதியினரிடம் விசாரணை நடத்தினர். தண்டவாளத்தையும் ஆய்வு செய்தனர். மர்மநபர்கள் யாரேனும் ரெயிலை கவிழ்க்கும் சதியில் இந்த கற்களை வைத்தனரா? அல்லது வேறு யாரேனும் விளையாட்டுக்காக கற்களை வைத்தனரா? என்பது குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

கடந்த செப்டம்பர் மாதம் கடையநல்லூர் அருகே சங்கனாபேரி பகுதியில் தண்டவாளத்தில் பெரிய கல்லை வைத்து பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயிலை கவிழ்க்க முயன்றதாக வடமாநில தொழிலாளர்கள் 2 பேரை ரெயில்வே போலீசார் கைது செய்தனர். அவர்களது செல்போனில், ரெயில் தண்டவாளத்தில் நின்று ரீல்ஸ் எடுத்த வீடியோ இருந்ததால் கைது செய்யப்பட்டனர்.

தற்போது மீண்டும் 2வது முறையாக அதே பகுதியில் ரெயிலை கவிழ்க்கும் வகையில் தண்டவாளத்தின் நடுவில் பெரிய கற்கள் வைக்கப்பட்டு இருந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த செயலில் ஈடுபட்டது யார் என்று போலீசார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.


தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

## கந்த சஷ்டி திருவிழா யாகசாலை பூஜையுடன் தொடங்கியது... (முதல் பக்க தொடர்ச்சி)

நடைபெறும் தினமும் 1 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையொட்டி பக்தர்களுக்காக தற்காலிக கழிப்பறைகள், குடிநீர் வசதி, தற்காலிக பஸ் நிறுத்தும் இடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

மேலும் கோவில் நிர்வாகம், மாவட்ட நிர்வாகம், சுகாதாரத்துறை, தீயணைப்பு துறை உள்ளிட்டவைகள் சார்பிலும் முன்னேற்பாடு பணிகள் செய்யப்பட்டு உள்ளது. பக்தர்கள் கடலில் புனித நீராடி வருவதால் கடலோர காவல் படையினரும் பக்தர்களின் பாதுகாப்பிற்காக தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். காவல்துறை சார்பில் சுமார் 2 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இன்று லட்சக்கணக்கான பக்தர்கள் திரண்டுள்ள தால் கோவில் வளாகம் பக்தர்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகிறது. இன்று புனித நீராடி சுவாமி தரிசனம் செய்வதற்காக ஏராள மானோர் திரண்டனர். இன்று காலை சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு வரிசையில் காத்திருந்து பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் தக்கார் அருள்முருகன், இணை ஆணையர் ஞானசேகரன் மற்றும் கோவில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007




# டிசம்பரில் தமிழக சட்டசபை மீண்டும் கூடுகிறது

# டிசம்பர் 27 முதல் மாநிலம் முழுவதும் விஜய் சுற்றுப்பயணம்



# வங்கக்கடலில் 7ந் தேதி காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகிறது


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

• 2-11-2024 சனிக்கிழமை •வெளியூர்: 3-11-2024 ஞாயிற்றுக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்